பாடம் - 4

## பெண் விடுதலை

### 4.1 முன்னுரை

முன் பாடத்தில் சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம், அதன் வரலாறு, அந்த இயக்கத்தால் விளைந்த சமூக மாற்றங்கள் ஆகிய செய்திகளை அறிந்து கொண்டீர்கள். இப்பாடத்தில் பெண் விடுதலையின் இன்றியமையாமையையும் பெண் விடுதலைக்குத் தடையாக உள்ளவற்றையும் பெண் இன மேம்பாட்டிற்கு செய்ய வேண்டிய அரும்பணிகளையும் பெரியார் பார்வையில் அறிந்து கொள்ள இருக்கிறீர்கள்.

### 4.2 நோக்கங்கள்

- வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் உலகில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை விளக்குதல்.
- பெண் உரிமைப் பறிப்பிற்கான முக்கிய காரணிகளைக் கண்டறிதல்.
- பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பட்டியலிடுதல்.
- கற்பு பற்றி ஈ.வெ.இரா. கூறுவனவற்றை விளக்குதல்.
- குடும்பம், தனிச்சொத்து பிள்ளைப்பேறு ஆகியவற்றுக்கு இடையேயுள்ள தொடர்பினை விளக்குதல்.
- பலமனைவியர் மணம், ஆண்பிள்ளை வேண்டுமென அவாவுதல் ஆகியவற்றிற்காக காரணங்களை விளக்குதல்.
- மக்கள் தொகைப் பெருக்கத்திற்கான காரணங்களைப் பட்டியலிடுதல்.
- அதிகப் பிள்ளைப்பேறு பெண் – ஆண் இருவரையும் எப்படி பாதிக்கின்றது என்பதனை விளக்குதல்
- 'கர்ப்பஆட்சி' என்பது பற்றி ஈ.வெ.இரா. கூறியுள்ளனவற்றை விளக்குதல்.
- மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த காந்தியார் கூறியுள்ள தீர்வின் பொருத்தப்பாடின்மையை விளக்குதல்.
- பிள்ளைப்பேறு என்பது பெண் அடிமைத்தனத்தை நிலைநிறுத்த உதவுகின்றதென்பதற்கான காரணங்களைப் பட்டியலிடுதல்.
- 'சோதனைக் குழாய் குழந்தை' பற்றி ஈ.வெ.இரா. கூறியுள்ளதை விளக்குதல்.
- பெண் விடுதலைக்கான தளையை அறுக்கும் வழியை விளக்குதல்.

பாட அமைப்பு


4.1 முன்னுரை

4.2 நோக்கங்கள்

4.3 பாட அறிமுகம்

4.4 பாடப் பிரிவுகள்

4.4.1 வரலாற்றுக்கு முந்தைய காலம்

4.4.2 கற்பொழுக்கம்

4.4.3 கைம்பெண் மறுமணம்

4.4.4 குழந்தை மணம்

4.4.5 மணவிலக்கு உரிமை

4.4.6 பெண்களுக்குச் சொத்துரிமை

4.4.7 பெண் விடுதலைக்குத் தடைகள்

4.4.8 ஆணும் பெண்ணும் சமம்

4.5 பாடத் தொகுப்புரை

4.6 முக்கியச் சொற்கள்

4.7 தன்மதிப்பீட்டு விடைகள்

4.8 மாதிரி வினாக்கள்

### 4.3 பாட அறிமுகம்

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது? பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை, அக்கொடுமைக்கான காரணங்கள் போன்றவை இப்பாடத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும் பெண் விடுதலைக்குத் தடையாக உள்ள குடும்ப அமைப்பு, தடையை நீக்கும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பெரியார் சிந்தனை வழி விளக்கப்படுகின்றன.

### 4.4 பாடப் பிரிவுகள்

### 4.4.1 வரலாற்றுக்கு முந்தைய காலம்

உயிரியல், நிலவியல், மானிடவியல், வானவியல் அறிஞர்களின் முடிவுப்படி இவ்வுலகில் உயிரினங்கள் தோன்றி 12 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கும் எனச் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் சாத்தனூர் குடிகாடு என்ற ஊரில் உள்ள உயிர்ப்படிவக் கல்மரம் 12 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது என்று நிறுவப்பட்டிருப்பதே இதற்குச் சான்றாகும்.

மானிடவியல், விலங்கியல் அறிஞர்கள் ஆய்வுப்படி மனிதன் தோன்றி இரண்டு இலக்கம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மானிடம் நாகரிகம் பெற்ற காலம் பத்தாயிரம் ஆண்டுகட்கு உட்பட்டதாகும். பழம்பெரும் நாடுகளான கிரேக்கம், உரோம், பாரசீகம், இந்தியா, சீனா முதலான நாடுகளைப் பற்றிய தோராயமான வரலாறுகள் ஆறாயிரம் ஆண்டுகட்கு உட்பட்டவையே. இந்தியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் கி.மு. 3000 தொடங்கி 1500 வரை நிலவியதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்து பிறந்த காலத்தில் உலகில் இருந்த மக்கள் தொகை இருபது கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. மிகப் பரந்த இவ்வுலகில் அக்காலத்தில் வாழ்ந்த இருபது கோடி மக்களுக்கு இயற்கையில் விளைந்த காய், கனி, கிழங்கு, தானியம் முதலியவை உணவுப்பண்டங்களாகப் போதிய அளவுக்கு மேல் கிடைத்திருக்க வாய்ப்புண்டு.

கிறிஸ்து காலத்துக்கு முற்பட்ட ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் மனிதக்கூட்டம் ஒரே இடத்தில் நிலைபெற்று வாழ்ந்ததாக அறிய முடியவில்லை. வேண்டிய உணவைத் தேடி இடம் பெயர்ந்து அலைந்ததென்பதே வரலாற்றுக்கு முந்தைய கட்டத்தில் வாழ்ந்த மனிதக் கூட்டத்தின் வாழ்க்கை நிலைமையாகும். அப்படி இடம் பெயர்ந்த மக்கள் இயற்கையில் விளைந்த பண்டங்களைத் தின்றதோடு விலங்குகளையும், பறவைகளையும், வேட்டையாடித் தின்கின்ற செயலையும் மேற்கொண்டிருந்தனர். மனிதன் செய்த முதலாவது தொழில் வேட்டையாடுதலே.

அதற்கென அவன் கண்டுபிடித்த முதலாவது ஆயுதங்கள் கல்லும், தடியும் எலும்புகளுமேயாகும். இரண்டாவது கட்டத்தில் இவைகளே கூர்மைப்படுத்தப்பட்டு ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

தம்மால் வேட்டையாடப்பட்ட விலங்குகள், பறவைகளின் ஊனை வேட்டையில் பங்கேற்ற அத்துணைப்பேரும் அவரவர்க்குத் தேவையான அளவு பச்சைக் கறியாகவே தின்றனர். அடர்ந்த காடுகளில் மரங்கள் உராய்வதனால் உண்டான காட்டுத்தீயில் வெந்து கிடந்த விலங்குகள், பறவைகளின் ஊனைத் தின்ற மனிதன், சுட்டுத் தின்றால் ஊன் சுவையாக இருக்கும் என்பதைக் கண்டான். உராய்வினால் நெருப்பு உண்டாவதைத் தெரிந்து கொண்ட மனிதன் கற்களையும், மரக்கட்டைகளையும் உரசித் தானே தீயை உண்டாக்கிக் கொண்டான். மனிதன் கண்டுபிடித்த வாழ்க்கைக்கான முதலாவது சாதனைத் தீயே ஆகும்.

வேட்டை வாழ்க்கை நிலையில் இருந்தபோதே எளிதில் பிடிக்கப்படவும், பாதுகாக்கப்படவும், பழக்கப்படுத்தப்படவும், பயன்படுத்தப்படவும் ஏற்றவையான மாடுகளையும், ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு மேய்ச்சலுக்கான புல்வெளிகளைத் தேடிக் குழுவாக மக்கள் இடம் பெயர்ந்து கொண்டே இருந்தனர். அப்படிச் சென்ற இடங்களில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் ஒரு சேரவே தங்கியிருந்தனர். பெரிதும் அம்மணமாகவும், இலைகளாலும், மரப்பட்டைகளாலும் உடம்பை மறைத்துக் கொண்டுமே அவர்கள் வாழ்ந்தனர். அவர்களிடையே ஆண், பெண் சேர்க்கை என்பது ஓர் இயல்பான செயலாகவே நிகழ்ந்து வந்தது.

மேலும், தாய், உடன்பிறந்தவர்கள், மகள், தந்தை, உடன்பிறந்தவன், மகன் என்கிற உறவுமுறைகளைக் கடந்து உடல் சேர்க்கை நிகழ்ந்தது. அதாவது ஆண், பெண் சேர்க்கை என்பது ஒரு கட்டுப்பாடு அல்லது வரன்முறைக்கு உட்பட்டு இருக்கவில்லை. இந்நிலை பல ஆயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கக்கூடும்.

## திருமண முறைகள்

மனிதர்கள் ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்னர் தனக்கு உரிய விலங்குகளை வளர்க்கவும், தனக்கு வேண்டிய தானியங்களைப் பயிர் செய்து கொள்ளவும், ஆணும் பெண்ணும் சேர்ந்த ஒரு குடும்பமாக தங்கி வாழவும் தொடங்கினர். அப்போது முதல் குடும்பத்துக்கு உரிய தலைவன், தலைவி, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் என்கிற திட்டவட்டமான குடும்ப அமைப்பு ஏற்படலாயிற்று. அப்படிப்பட்ட குடும்பத்தில் தனக்கு உரிமையான ஆண், தனக்கு உரிமையான பெண் என்கிற உணர்வு அரும்பலாயிற்று. ஆயினும் அப்படிப்பட்ட பலப்பல குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஒன்று கூடிப் பழகும்போது, ஒரு குடும்பத்தைச் சார்ந்த பெண்ணுக்கோ, ஆணுக்கோ இன்னொரு குடும்பத்தைச் சார்ந்த பெண்ணோடும், ஆணோடும், அறிமுகமும், உடலுறவும் ஏற்பட்டது. அப்படிப்பட்ட உடலுறவு இரு வீட்டாருக்கும் தெரியாமல் நீடித்த தன்மையே களவு ஒழுக்கம் என்று கூறப்படுவதாகும். உலகின் பல பகுதிகளிலும் இது இதே தன்மையில் தான் நீடித்தது.

இப்படிப்பட்ட நிலைமை இருந்தபோதுதான் திருமண முறை உருவாயிற்று. திருமண முறை என்பது கி.மு. 3000 இல் அரும்பிவிட்டது. 5000 ஆண்டுகட்கு முந்தைய மொகஞ்சதாரோ, அரப்பா நகர நாகரிக அமைப்பில் வீடுகள், தெருக்கள், கழிவு நீர்க்கால்வாய்கள், கிணறுகள், குளிக்குமிடங்கள், தானிய சேமிப்புக் குதிர்கள், மாடுகள், மாட்டு வண்டிகள் முதலியவை இருந்தன என்பதைக்கொண்டு இதனை அறியலாம். திருமண முறை என்பது ஆரியர்களிடையேயும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியதாக நாம் அறிய முடிகின்றது. இதற்கான சான்று ரிக் வேதத்தில் உள்ளது.

[illegible] அடிமை வேலை செய்யத் [illegible] என்றும் இந்த சூத்திரன், இந்த மூன்று வருணத்தாருக்கும் [illegible] பணி செய்வதை முக்கியமான [illegible] ஏற்படுத்தினர். இதனால் அவனுக்குத் தானம் [illegible] உரிமை [illegible] (மனு - அத்தியாயம் 1, சுலோகம் 91) என்னும் [illegible]

பெண்களுக்குக் காதல் உரிமை மறுக்கப்பட்டது. அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பலவாகும். அவை:

1. கற்பொழுக்கம் கட்டுப்பாடு
2. கைம்பெண் மறுமண உரிமை மறுப்பு
3. குழந்தைப் பருவ மணம்
4. மண விலக்கு உரிமை மறுப்பு
5. சொத்து உரிமை மறுப்பு
6. உடன்கட்டை ஏற ஊக்குவிக்கும் வழக்கம்
7. சமயச் சடங்குகள் செய்யும் உரிமை மறுப்பு
8. சாதி அல்லது வருணத் தூய்மை கருதியும் கற்பு அல்லது பதிவிரதைத் தன்மை கருதியும் பெண்கள் கட்டாயமாகத் திருமணம் செய்விக்கப்பட வேண்டும் என்கிற நிலைமை.
9. தேவர் அடியார் என்னும் பெயரில் பொட்டுக் கட்டுதல்
10. முட்டாக்குப் (பர்தா) போடுவதை வற்புறுத்தல்

மேற்கண்டவை பெண்களை அடிமைப்படுத்துவதற்கான நெறிகளாக வேதங்களிலும், ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் விதிக்கப்பட்டன.

### 4.4.2 கற்பொழுக்கம்

இலக்கியத்தில் கற்பு : கற்பு என்னும் தமிழ்ச் சொல்லுக்கான விளக்கம் தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றில் உள்ளவாறு அறியப்படுதல் நல்லது.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

என்பது தொல்காப்பியம். இதன் பொருள், கிழத்தியாக துணைவியாக ஒருத்தியைக் கொள்ளுவதற்கு உரிய கிழவன், பெண் கொடுக்க உரிய மரபினரிடத்துப் பெண் கேட்டு, அவர்களால் கொடுக்கப்பட்டுத் திருமண நிகழ்ச்சியை நடத்திக் கொள்ளுவதே கற்பு ஆகும் என்பதாம். இது 'கற்பொழுக்கம்' என்கிற திருமண வகையை மட்டுமே குறித்ததாகும். மேலும் இது 'களவுமுறைத் திருமணம்' என்பதிலிருந்து வேறுபட்டதாகும். இவ்வாறு இச்சொல் அமைந்துள்ள தன்மையைக் கொண்டு கற்பு என்னும் சொல் திருமணம் ஆன ஒரு பெண் என்பதைக் குறிப்பதற்கே பயன்படுகிறது என்பது தெளிவாகிறது. அப்பெண்ணின் ஒழுக்கம் பற்றி இது குறிப்பது யாது? உடன்போக்குச் சென்று பெற்றோரால் மணம் முடிக்கப்பட்ட பெண் என்பதை மட்டுமே இது உணர்த்தும். இதில் உடலுறவு பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

காலத்தால் தொல்காப்பியத்திற்குப் பிந்தியது திருக்குறள் ஆகும். திருகுறளில்,

*“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண் டாகப் பெறின்”* என வரும் குறளில், பெண் என்னும் சொல்லும், (குறள் 54) கற்பு என்னும் சொல்லும் பயிலப்படுகின்றன. “கற்பு என்னும் திண்மை” உடையவளாக ஒரு பெண் இருப்பாளானால் கணவனுக்கு அப்படிப்பட்ட பெண்ணைவிடப் பெருமை உடையது யாதுமே இல்லை என்றே இக்குறளில் குறிப்பிடப்படுகிறது.

இங்குக் கையாளப்பட்டுள்ள கற்பு என்னும் சொல் பெண்ணின் உடலுறவை – ஒழுக்கத்தைக் குறிப்பதேயாகும். அந்த ஒழுக்கம் எத்தன்மையது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் கூறுவதைக் கொண்டு, “பிறர் நெஞ்சில் இடம் பெறாதவளாக இருத்தல் – தற்கொண்டான் பேணுதல்” என்றே நாம் அறிய முடியும்.

இத்தகையதொரு நெறி, ஓரிடத்தில் மட்டுமே திருகுறளில் ஆணுக்கும் வரையறுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுவர்.

*“ஒருமை மகளிரே போலப் பெருமையும்*
*தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு” குறள் (974)*

என்பது திருக்குறள். ஒருவனோடே இருந்து வாழும் மகளிர் பெருமைக்கு உரியவர். அதேபோல் தன்னைத்தான் தற்காத்துக் கொண்டு ஆடவனும் நடந்தால் அவனுக்கும் பெருமை உண்டு என்பதே இதன் பொருளாகும்.

“கற்பு என்னும் திண்மை” ஓர் ஒழுக்கமாகப் பெண்ணுக்கு வரையறுக்கப்பட்டிருப்பது போல, ஆணுக்கும் “தன்னைத்தான் கொண்டொழுகுதல்” என்கிற ஓர் ஒழுக்கம் திருக்குறளில் வரையறுக்கப்பட்டிருப்பதை இவ்விரண்டு குறட்பாக்களைக் கொண்டும் அறியலாம்.

**‘கற்பு’ பற்றிப் பெரியார்**

“ஒரு பிறவிக்கு ஒரு நீதி” என்கின்ற கற்புமுறை அடியோடு ஒழிக்கப்படவேண்டும். இந்தத் தனி உடைமைத் தேசத்தில் இது ஒழிக்கப்படுவது என்பது சுலபத்தில் ஏற்படக்கூடிய காரியம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், பெண்களுக்குத்தான் கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்கிற தத்துவமே தனி உடைமைத் தத்துவத்தைப் பொறுத்தது”.

“கற்பு என்கிற வார்த்தையைப் பகுபதமாக்கிப் பார்ப்போமானால் . கல்.... கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது. அன்றியும், “கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை’ என்கின்ற வாக்கியப்படி பார்த்தால் ‘கற்பு’ என்பது சொல் தவறாமை அதாவது, நாணயம், சத்தியம், ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடப்பது என்கிறதான கருத்துகள் கொண்டதாக இருக்கின்றது.

அதைப் பகாப்பதமாக வைத்துப் பார்த்தால், ‘மகளிர் நிறை’ என்று காணப்படுகின்றது. இந்த இடத்தில் மகளிர் என்பது பெண்களையே குறிக்கும் பதமாக எப்படி ஏற்பட்டது என்பது விளங்கவில்லை. நிறை என்கின்ற சொல்லுக்குப் பொருளைப் பார்த்தால் அழிவின்மை, உறுதிப்பாடு, கற்பு என்கின்ற பொருள்களே காணப்படுகின்றன. கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரம் கிடைக்காவிட்டாலும் – அழிவில்லாதது. உறுதியுடையது என்கின்ற பொருள்களே காணக்கிடைக்கின்றன.

ஆனால், ஆரிய பாஷையில் பார்க்கும்போது மாத்திரம் ‘கற்பு’ என்கின்ற பதத்திற்குப் ‘பதிவிரதை’ என்கின்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில்தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது பெரியாரின் அபிப்பிராயம். அதாவது– பதியைக் கடவுளாகக் கொண்டவள், பதிக்கு

அடிமையாய் இருப்பதையே விரதமாகக்கொண்டவள், பதியை தவிர வேறு யாரையும் கருதாதவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன், 'பதி' என்கின்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்கின்ற பொருள்களிருப்பதால் அடிமைத்தன்மையை இவ்வார்த்தைகள் புலப்படுத்துகின்றன. ஆனால், தலைவி என்ற பதத்திற்கும் நாயகி என்கின்ற பதத்திற்கும் மனைவி என்கின்ற பொருள் குறிக்கப்பட்டிருந்தாலும், அது அன்பு கொண்ட நிலையில் மாத்திரம் ஆணையும் பெண்ணையும் குறிக்கின்றதேயொழிய, வாழ்க்கையில் கட்டுப்பட்ட பெண்களுக்குத் 'தலைவி' என்கின்ற வார்த்தை, அதன் உண்மைக் கருத்துடன் வழங்கப்படுவதில்லை. நாயகன், நாயகி என்கின்ற சமத்துவமுள்ள பதங்களும் கதைகளிலும், புராணங்களிலும் ஆண்–பெண் இச்சைகளை உணர்த்தும் நிலைகளுக்கே மிகுதியும் வழங்கப்படுகின்றன. ஆகவே, காமத்தையும், அன்பையும் குறிக்குங்காலங்களில் சமத்துவப் பொருள் கொண்ட நாயகன்–நாயகி, தலைவர்–தலைவி என்கின்ற பதங்களை உபயோகித்துவிட்டு, கற்பு என்கின்ற நிலைக்கு வரும்போது அதைப் பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்படுத்தி, 'பதி' ஆகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ளவேண்டுமென்ற கருத்து கொள்ளப்பட்டிருக்கிறது.

கற்பு என்பதற்குப் பதிவிரதம் என்று எழுதிவிட்டதன் பலனாலும், பெண்களைவிட ஆண்கள் செல்வம், வருவாய், உடல்வலி கொண்டவர்களாக ஆக்கப்பட்டுவிட்டதனாலும், பெண்கள் அடிமையாவதற்கும், புருஷர்கள் மூர்க்தர்களாகிக் கற்பு என்பது தங்களுக்கு இல்லை என்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை.

தவிர, புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷைகளில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்குக் காரணம் ஆண்களின் ஆதிக்கம் தவிர வேறில்லை.

மற்றும், சில சமூகங்களில் 'பர்தா' என்றும் 'கோஷா' என்றும், 'திரை' என்றும் அதாவது பெண்கள் அறைக்குள்ளிருக்க வேண்டியவர்களென்றும், முகத்தை மூடிக்கொண்டு வெளியில் போக வேண்டியவர்கள் என்றும் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளும்; புருஷன் பல பெண்களை மணக்கலாம், பெண்கள் ஏககாலத்தில் ஒரு புருஷனுக்கு மேல் கட்டிக் கொண்டு வாழக்கூடாது என்ற கொள்கையும், நம் நாட்டில் ஒரு முறை புருஷன்– பெண்சாதி என்கின்ற சொந்தம் ஏற்பட்டுவிட்டால் பிறகு அந்தப் பெண்ணுக்குச் சாகும் வரைக்கும் வேறு எவ்விதச் சுதந்திரமும் இல்லையென்றும், புருஷன், பல பெண்களைக் கட்டிக்கொண்டு ஒரு பெண்ணின் முன்பாகவே பல பெண்களுடனும் கூடி வாழலாம் என்றும், புருஷன் தன்னுடைய மனைவியைத் தன் வீட்டில் வைத்துக் கொண்டு, அவளுடன் ஒன்றித்து வாழாமலிருந்தாலுங்கூட, புருஷனைச் சாப்பாட்டிற்கு மாத்திரம் கேட்கலாமேயொழிய இன்பத்திற்கோ இச்சையைத் தீர்ப்பதற்கோ அவனைக் கட்டுப்படுத்த மனைவிக்கு உரிமையில்லையென்றும் கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன.

இந்நிலை சட்டத்தாலும், மதத்தாலும் மாத்திரம் ஏற்பட்டதென்று சொல்வதற்கில்லாமல், பெண் சமூகம் ஒப்புக் கொண்டு, இந்நிலைக்கு உதவி புரிந்து வருவதனாலும், உரம்பெற்று வருகிறதென்றே சொல்ல வேண்டும். அதிக வருடப் பழக்கவழக்கங்களால் தாழ்ந்த சாதியார் எனப்படுவோர் எப்படித் தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதை ஒப்புக் கொண்டு, தாமாகவே கீழ்ப்படியவும் ஒடுங்கவும் விலகவும் முந்துகின்றார்களோ, அதுபோலவே பெண் மக்களும் தாங்கள் ஆண் மக்களின் சொத்துகளென்றும், ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களென்றும், அவர்களது கோபத்திற்கு ஆளாகக் கூடாதவர்களென்றும் நினைத்துக் கொண்டு, சுதந்திரத்தில் கவலையற்று இருக்கின்றார்கள். உண்மையாகப் பெண்கள் விடுதலை வேண்டுமானால் 'ஒரு பிறப்புக்கொரு நீதி' ஒழுங்கும் நிர்பந்தக் கற்பு முறையொழிந்து, 'இரு பிறப்பிற்கும் சமமான சுயேச்சைக் கற்பு முறை' ஏற்பட வேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக்

கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும் படியான நிர்ப்பந்தக் கலியாணங்கள் ஒழிய வேண்டும்.

கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மையன்பை, காதலை மறைத்துக்கொண்டு – காதலும், அன்புமில்லாதவனுடன் இருக்க வேண்டும் என்கின்ற சமூகக் கொடுமையும் அழிய வேண்டும்.

எனவே, இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிறவியில் உண்மைக் கற்பை சுதந்திரக் கற்பைக் காணலாமேயொழிய நிர்ப்பந்தங்களாலும், ஒரு பிறப்புக்கொரு நீதியாலும், வலிமை கொண்டவன் வலிமையற்றவனுக்கு எழுதிவைத்த தர்மத்தாலும் ஒருக்காலும் காணமுடியாது என்பதுடன், அடிமைக் கற்பையும் நிர்ப்பந்தக் கற்பையுந்தான் காணலாம். அன்றியும், இம்மாதிரியான கொடுமையைவிட வெறுக்கத்தக்க காரியம் மனித சமூகத்தில் வேறொன்று இருப்பதாக என்னால் சொல்ல முடியாது." (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள் பக் 115)

மேலும், கற்பு என்பது பெண்களின் பேரில் மட்டும் சுமத்தப்பட்டிருப்பது – பெண்களை அடக்கி ஆள ஒரு கருவி என்பதும் அவருடைய கருத்தாகும்.

தமிழராலும், ஆரியராலும் கொள்ளப்பட்ட எண்ணங்களை ஆய்வு செய்ததோடு நில்லாமல், இஸ்லாமியர்களும், ஹிப்ருக்களும், இந்தியாவில் இமாசலப் பிரதேசம், மலையாளம் முதலிய பகுதிகளில் வாழும் மக்களும்; திபெத் மற்றும் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, ரோமாபுரி, இங்கிலாந்து, அரேபியா, பிலிப்பைன்ஸ், பொலினிஷியாத் தீவு முதலான தொலைதூர நாடுகளில் வாழும் மக்களும் கற்பொழுக்கம் பற்றி என்னென்ன எண்ணங்களைக் கொண்டிருந்தனர் – கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும்; அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தது பற்றியும், காலப்போக்கில் அவை மாறுதலடைந்து வந்துள்ளன என்பது பற்றியும், ஈ.வெ.இரா. துல்லியமாக ஆய்ந்து விரிவாக விளக்கியுள்ளாரென்பது நாம் அறியத்தக்கது.

### 4.4.3 கைம்பெண் மறுமணம்

விதவை மறுமணம் : கணவனை இழந்த ஒரு பெண் மறுமணம் செய்து கொள்ளுவது ஏற்புடையது அல்ல என்ற கொள்கை அதர்வண வேத காலம் தொட்டு இங்கே வளர்க்கப்பட்டது. (அதர்வண வேதம் 9, 5, 279) அதர்வண வேதத்தை அடுத்து நாரதர், பராசரர், இயமா ஆகியோர் இக்கொள்கையைத் தூக்கி பிடித்தனர். கணவனை இழந்த பெண் அவனுடைய உடன்பிறந்த ஆணைக்கூடிப் பிள்ளை பெற்றுக் கொள்ளலாம் என்பதும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டபடி, கி.பி. 600 வரை நீடித்தது.

கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளுவது இழிவானது என்கிற கோட்பாடு கி.மு. 300 முதல் கி.பி. 200 வரை செல்வாக்கோடு வளர்த்தெடுக்கப்பட்டது. கைம்பெண்களுக்கு மொட்டை அடித்தல், சமயச்சடங்குகளில் பங்கு பெறுவதிலிருந்து விலக்கி வைத்தல் முதலான ஒதுக்கல் பழக்கங்கள் கி.பி. 500–க்குப்பின் அவர்கள் பேரில் சுமத்தப்பட்டன. குழந்தைப் பருவத்தில் விதவையானவர்களும் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்பது கி.பி. 100 முதல் நடப்புக்கு வந்தது. இவையெல்லாம் விஷ்ணு, மநு, நாரத ஸ்மிருதிகளின்படியே பின்பற்றப்பட்டன. தேவண்ண பட்டா (கி.பி. 1150) கலியுகத்தில் கைம்பெண் மணம் சாஸ்திரத்திற்கு எதிரானது என்று கூறினார். எனவே, மேல்சாதிக்காரர்களிடையே கைம்பெண் மறுமணம் என்பது கி.பி 1100–க்குப் பிறகு பெரும்பாலும் நடைபெறாமலேயே போய்விட்டது.

ஆனால், கீழ்ச்சாதி மற்றும் உழைப்பாளி வகுப்பினரிடையே அன்றும், இன்றும் கைம்பெண் மறுமணம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

தமிழ்நாட்டிலுள்ள வன்னியர் வகுப்பாரில் ஒரு பிரிவினரிடையேயும், முக்குலத்தோர் வகுப்பாரில் ஒரு பிரிவினரிடையேயும், நாடார் வகுப்பில் ஒரு பிரிவினரிடையேயும், ஆதித் திராவிடர் வகுப்பினரிடையேயும் கைம்பெண் மறுமணம் நடைபெறுவது கண்கூடு.

டாக்டர் அம்பேத்கர் 1947 இல் முன்மொழிந்த இந்துச் சட்டத்திருத்த மசோதாவின் வரைவில் பல கூறுகள் ஏற்கப்பட்டு 18-5-1955 இல் சட்டங்களாக நிறைவேற்றப்பட்டன. அதன்படி கைம்பெண்களுக்கு மறுமண உரிமை சட்டப்படி அளிக்கப்பட்டு விட்டது. ஆயினும், இது இன்னும் பெரு வழக்காக நடப்புக்கு வரவில்லை.

இப்படிப்பட்ட இந்தியச் சமூகத்தில் கைம்பெண் ஒருத்தி எவ்வளவு கொடுமைக்கு ஆளாகிறாள்; இளவயதுக் கைம்பெண்ணின் மனநிலை எத்துணைப் பெரிய நம்பிக்கை இழப்புக்கு ஆளாகித் தவிக்கிறது என்பதை நேரிடையாகத் தம் குடும்பத்திலேயே ஈ.வெ.இரா. கண்டார்; மனம் நொந்தார். கைம்பெண்ணுக்கு நேரும் கொடுமையை நீக்கியே தீரவேண்டும் என்று அன்றே உறுதிபூண்டார். அவ்வுறுதியைச் செயல்படுத்திக் காட்டினார்.

அது பற்றி அவரே எழுதுகிறார் : "இது போழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாகாதென்றும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செயலாகும். தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்து கொள்ளலாமென்றும், தன் கணவனை இழந்த – மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்துகொள்ளலாகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச்செயலாகாது.

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் கற்புக்குப் பங்கம் விளைவிப்பது ஆகும் எனக் கூறினால் அது பொருந்தாது. விதவைகளை மறுமணம் செய்விக்காதிருத்தலினாலேயே அவர்கள் கற்பழிந்து மாய்கின்றனர். காமச்சுவை கருதும் இளம் கைம்பெண்கள் படிற்றொழுக்கத்தில் விழ்ந்து, அதனால் கருப்பந்தரித்து இரண்டோர் திங்களுள் 'சிசு ஹத்தி' தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப்பாவம் யாரைச் சாரும்? விதவைகளை மறுமணம் செய்து கொள்ளல் ஆகாதென்று கட்டாயப்படுத்திவரும் பெற்றோர்களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து, ஏனைய கைம்பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று. விதவைகளின் கலியாணத்தைப் பற்றி இவ்வாறு எழுதும் நான், எழுத்தளவோடும் சொல்லளவோடும் ஆதரிக்கின்றேனா, அன்றிச் செய்கையிலும் ஆதரித்துள்ளேனா என்ற ஐயம் அன்பர்களுக்குத் தோன்றலாம். இதன் பொருட்டேனும் எனது கருத்தைப் பிரதிபலிக்கும் செய்கையைக் கூற விரும்புகிறேன்.

நான் கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவன். என் வகுப்பின் பெண் மக்கள் முக்காடுடன் – 'கோஷாவாக' இருக்க வேண்டியவர்கள் எனவும், விதவா விவாகத்தை அனுமதிக்கப்படாத வகுப்பினரெனவும் வழங்கப்படுபவர்கள். நான் பிறந்த குடும்பமோ அளவிற்கு மிஞ்சிய ஆச்சாரத்தையும், வைணவ சம்பிரதாயத்தையும் கடுமையாய் ஆதரிக்கும் குடும்பம் இப்படி இருந்தபோதிலும், என்னுடைய 7 ஆவது வயதிலிருந்தே மக்களில் உயர்வு – தாழ்வு கற்பித்தலையும், ஒருவர் தொட்டதை மற்றவர் சாப்பிடலாகாதெனச் சொல்வதையும் நான் பரிகாசம் செய்து வந்ததோடு, யாரையும் தொடுவதற்கும், எவர் தொட்டதையும் சாப்பிடுவதற்கும் நான் சிறிதும் பின்வாங்கியதே கிடையாது.

என் தங்கை தன் இளம் வயதிலேயே ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் குழந்தையையும் விடுத்து விண்ணுற்றாள். அப்பெண் குழந்தைக்கு அதன் 10வது வயதில் சிறந்த செல்வாக்கோடு ஒரு செல்லக் கலியாணம் செய்து வைத்தோம். கலியாணம் செய்த 60 ஆம் நாள் அப்பெண்ணின் கணவன் என்னும் 13 வயதுள்ள சிறு பையன் பகல்

2 மணிக்கு 'விஷபேதி' யால் விண்ணுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும், அப்பெண்குழந்தை என்னிடம் ஓடிவந்து, 'மாமா! எனக்குக் கலியாணம் செய்து வை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே' என்று 'ஓ' வென்று அலறிய சத்தத்தோடு என் காலடியில் அதன் மண்டையில் காயமுண்டாகும்படி திடீரென்று விழுந்தது. துக்கம் விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண் பெண் உள்பட சுமார் 600, 700 பேர்கள் அக்குழந்தையையும், என்னையும் பார்த்தவண்ணமாய்க் கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் வடித்தனர். எனக்கும் அடக்கவொண்ணா அழுகை வந்துவிட்டது. ஆனால், கீழே கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப் பிடித்துத் தூக்கும் போதே, மறுபடியும் அதற்குக் கலியாணம் செய்துவிடுவது என்கின்ற உறுதியுடனேயே தூக்கினேன்.

பிறகு, அந்தப் பெண் பக்குவமடைந்த ஒரு வருடத்திற்குப் பின், அதற்குக் கலியாணம் செய்ய நானும் எனது மைத்துனரும் முயற்சி செய்தோம். இச்செய்தி எனது பெற்றோருக்கும் எட்டவே, அவர்கள் இதைத் தங்கள் வகுப்புக்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டது போலக் கருதி, பெரிதும் கவலைக்குள்ளானவர்களாகி, நாங்கள் பார்த்து வைத்திருந்த இரண்டொரு மாப்பிள்ளைகளையும் கலைத்தார்கள். முடிவில் எனது மைத்துனரின் இரண்டாந்தாரம் மைத்துனரைப் பிடித்துச் சரிசெய்து, எவரும் அறியாவண்ணம் பெண்ணையும், மாப்பிள்ளையையும் சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்று அங்குக் கோயிலில் கலியாணம் செய்வித்து ஊருக்குக் கூட்டி வந்தனர். ஆனால், நான் சிதம்பரத்திற்குப் போகாமல் ஊரிலேயே இருக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் அவர்கள் போயுள்ள செய்தியைச் சுற்றத்தார் அறிந்தால், ஏதாவது மாப்பிள்ளையைத் தடைசெய்துவிடுவார்களோ என்கிற பயத்தால், நான் ஊரிலிருந்தால் கலியாணத்திற்காக வெளியூருக்குப் போயிருக்கிறார்களெனச் சந்தேகமிருக்காது என்கிற எண்ணங்கொண்டேயாகும். இக்கலியாணத்தின் பலனாக, இரு மூன்று வருட காலம் பந்துகளுக்குள் வேற்றுமையும் பிளவும் ஏற்பட்டு, சாதிக் கட்டுப்பாடு இருந்து, பிறகு அனைத்தும் சரிப்பட்டுப் போயின.

விதவைத் தன்மை என்பது ஒழுக்கச் சிதைவைத் திணிப்பதாகும் என்றும், கள்ளத்தனமாகப் பிள்ளை பெறுவதில் கொண்டுபோய்த் தள்ளி விடுகிறதென்றும், கட்டுக்காவலை மீறித் தீரவேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாக்குகிறதென்றும் எடுத்துக்காட்டிய ஈ.வெ.இரா., 'இவை எல்லாம் கடவுள் செயல்கள் என்று கடவுள் நம்பிக்கைக்காரர்கள் நினைக்கிறார்களா ?' என்று ஒரு வினாவை எழுப்பினார்.

அத்துடன் விதவைத் திருமணம் கூடாது என்பது பெரும்பாலும் மேல்சாதிக்காரர்களிடமே நிலவி இருந்தது. கீழ்ச்சாதிக்காரர்களிடமும், உழைப்பாளிச் சாதிகளிடமும் அது இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். பின்வரும் செய்திகள் அதை உணர்த்தும்.

"இந்நாட்டில் ஒழுக்கம் சீர்பட வேண்டுமானால் – விபச்சாரம் என்னும் காரியத்திலுள்ள கெடுதிகள் நீங்க வேண்டுமானால் விதவைத் தன்மையும், ஆண்களுக்கு விபச்சார தோஷமில்லை என்கின்ற நடப்பையும் ஒழித்தாக வேண்டும். அவ்விரண்டு காரியங்களே பெரிதும் மனிதத் தன்மைக்கும், இயற்கை இன்ப நுகர்ச்சிக்கும் இடையூறாய் இருந்து வருகின்றன. பெண்களைப் பெற்றோர்களும் ஒரு விஷயத்தில் கவனிக்க வேண்டும். பெண்களுக்கு 16 வயதுவரை நல்ல கல்வியைக் கொடுக்க வேண்டும்; தனக்கு வேண்டியவனைத் தேர்தெடுத்துக் கொள்ளப் பழக்க வேண்டும்.

ஒரு குழந்தையுள்ள விதவையை மணம் செய்து கொள்ள ஏற்பட்டால், 'குழந்தையே இல்லாத விதவை கிடைக்கவில்லையா?' என்றும் இதற்குமுன் பக்குவமான – சாந்திமுகூர்த்தமான விதவையைக் கலியாணம் செய்தபோது, 'பக்குவமாகாத விதவை

கிடைக்கவில்லையா?' என்கிறார்கள். வேறு சாதியில் ஒரு விதவையைக் கலியாணம் செய்துகொண்டபோது, 'நமது சாதியிலேயே ஒரு விதவை இல்லையா?' என்கிறார்கள். இவ்விஷயங்களில் நாம் பொதுஜன அபிப்பிராயத்தைக் கண்டு பயப்படக்கூடாது". (பெரியார் ஈ.வெ.இரா.சிந்தனைகள், பக் 142)

"ஒரு சமயம் விதவா விவாகஞ் செய்து கொண்டது குற்றம் என்று சொல்லப்படுமானால் அதுவும் அறியாமை என்றுதான் சொல்ல வேண்டும். உலகில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் - எந்த மதத்திலும் விதவை மணம் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

இந்தியாவிலும், இந்து மதத்திலுங்கூட அனேக சாதிகளில் விதவை மணம் அனுமதிக்கப்பட்டும் நடந்தும் வருகின்றது.

விதவைத் தன்மையை அனுமதிக்கும் சமூகம் மற்றொரு விதத்தில் விபச்சாரத்தனத்தைத் தூண்டவும், அனுமதிக்கவும் செய்கின்ற சமூகம் என்றுதான் சொல்ல வேண்டும்." (காரைக்குடியில் 19–4–1935 இல் சொற்பொழிவு; 'குடி அரசு' 28–4–1935)

## விபச்சாரம்

"விதவைத் தன்மையேதான் விபச்சாரம் என்கின்ற பிள்ளையைப் பெறுகின்றது. பிறகு, ஆண் எப்படி வேண்டுமானாலும் திரியலாம் - எவ்வளவு பெண்சாதிகளை வேண்டுமானாலும் மணக்கலாம் என்கின்ற முறையே விபச்சாரம் என்னும் அந்தப் பிள்ளையை வளர்க்கின்றது. கலியாண ரத்து இல்லை என்கிற முறையானது, விபச்சாரத்தை நீடூழி வாழச் செய்கிறது. இவற்றிற்கு எல்லாம் பரிகாரம் செய்யாமல் விபச்சாரத்தைப் பற்றிப் பேசுவது என்பது பயனற்ற காரியமாகும்.

விதவைத்தன்மை என்பது நமது நாட்டில் மிக்க கொடுமையான முறையில் இருந்து வருகின்றது. இதை எந்தச் சீர்திருத்தவாதியும் கவனிப்பதேயில்லை. விதவைகள் வாழ்க்கை ஒரு சிறைக்கூட வாழ்க்கையை ஒக்கும். ஒரு கைதிக்குள்ள நிர்ப்பந்தம் ஒவ்வொரு விதவைக்கும் இருந்து வருகின்றது. எப்படி ஒரு கைதியானவன் சிறைக்கூட விதியை மீறவேண்டும் என்கின்ற ஆசைக்கும், அவசியத்துக்கும் உள்ளாகிறானோ, அது போலவேதான் ஒவ்வொரு விதவையும் விதவைச் சட்டத்தை மீறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிக் கஷ்டப்படுகிறாள். இந்தக் கொடுமை ஒரு நிரபராதியான பெண்ணுக்கு ஏன் ஏற்படவேண்டுமென்று கேட்டால், இதற்கு என்ன மறுமொழி இருக்கிறது? இந்த 20-வது நூற்றாண்டில் தலைவிதி என்றும், கடவுள் செயல் சொல்லி மக்களை ஏய்க்க முடியுமா?

விதவைத்தன்மை என்பது கடவுள் செயலாக இருந்தால், பார்ப்பனர்கள் நிறைந்த பார்த்தசாரதி கோயில் தெரு (சென்னை) தெப்பக்குளத்தில் தினம் ஒரு குழந்தை எப்படி மிதக்க முடியும்? ஊர்த்தோறும் குப்பைத் தொட்டிகளும், ஓடைப் புறம்போக்குகளும், கள்ளிமேடும், ஊருணிகளும் எப்படிப் பிள்ளைகளைப் பெற முடியும்?

ஆகவே, மனித சமூகத்துக்குக் கடுகளவாவது புத்தியும், நேர்மையும் இருக்கிறது என்று சொல்லப்படவேண்டுமானால், இந்த விதவைக் கொடுமை முதலில் ஒழிக்கப்பட்டாக வேண்டும். இந்தக் கொடுமை பகுத்தறிவுள்ள மனித சமூகத்தில் இருக்கிறது என்றால், பகுத்தறிவுக்கு இழிவு கற்பிக்க இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா? என்று கேட்கிறேன்" ('குடி அரசு' - 16–61935; பெரியார் சிந்தனைகள் 142–143)

இளம் வயதுக் கைம்பெண்கள் வாழ்க்கையைத் துய்க்க எண்ணி ஏங்குபவர்கள். அவர்கள் பெற்றோராலும், உடன் பிறந்தோராலும், மற்றோராலும் தீண்டப்படத் தகாதவர்

போல் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். முதலாவதாகத் திருமணம் செய்து கொள்ளுவோரும் கூட அவர்களைப் பெண் கேட்பது இல்லை. இரண்டாவது மணம் புரியும் – மனைவியை இழந்த ஆடவரும் இவர்களை விரும்புவது இல்லை. இப்படிச் சிந்துவார் இன்றிச் சிறுமைப்படுத்தப்படுகிறார்கள் அவர்கள் என்பதை நினைத்து நெஞ்சம் நெக்குருகிப் பாடுகிறார் சுயமரியாதை இயக்கப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (1891 – 1964)

*"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே – இங்கு*
*வேரிற் பழுத்த பலா*
*________"*

வேரிற் பழுத்த பலாப்பழம் போன்ற கைம்பெண்கள் அவர்களுக்கான இன்பத்தை நுகர மறுமணம் ஒன்றே தீர்வு எனத் துணிந்த ஈ.வெ.இரா. இதற்காக இறுதி வரை பேசினார்; பலருக்கு துணை நின்று வாழ்க்கை ஒப்பந்தங்களை நிறைவேற்றினார்.

"கணவனை இழந்த பெண்ணை விதவை என்று அழைக்கிறார்கள். ஆனால், மனைவியை இழந்த கணவனை 'விதவன்' என்று அழைப்பதில்லை. இதுவே பெண்ணைவிட ஆணை உயர்த்திக் காட்டுவதாகும்.


### பிற மதங்களில் விதவை மறுமணம்

விதவைத் திருமணம் என்பது நம் நாட்டில் உள்ள இஸ்லாமிய, கிறிஸ்துவ சமயங்களில் தங்கு தடையின்றி நடைபெறுகின்றது. இதேபோல் இந்து மதத்தைச் சார்ந்த கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வது மத, சாஸ்திர அடிப்படையில் தடுக்கப்படுவது ஏன் என ஈ.வெ.இரா. வினவினார். கைம்பெண் மறுமணம் பெருகுவதற்குத் தனக்கே உரிய தன்மையில் சில கருத்துகளை முன்மொழிந்தார்.

"விதவைத் திருமணம்" என்கிற சொல் நமது பெண்கள் விஷயத்தில்தான் சொல்லப்படுகிறதே தவிர, ஆண்கள் விஷயத்தில் சொல்லப்படுவதில்லை. எப்படி இந்த அம்மை ஒரு புருஷனுடன் கூடி, அவர் காலமான பிறகு இன்னொரு புருஷனை மணந்துகொள்கிறார்களோ, அதுபோல ஆண்களும் பலர், ஒரு மனைவி தவிர இண்டாவதாக வரிப்பதை விதவைத் திருமணம் என்கிறார்களா ? 'விதவன் திருமணம்' என்றுதானே போடவேண்டும்.

நானே ஒரு விதவன்; விதவனாகிப் பின் இரண்டாவது பெண்டாட்டி கட்டிக் கொண்டிருக்கிறேன். இம்மாதிரி சம்பவம் நம் நாட்டில் வெகுகாலத்திற்கு முன்பிருந்தே நடந்து வருகிறது; பெண்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். சாஸ்திர மத புராணங்களைப் பார்த்தால் ஏராளமாக உண்டு. நமது பெண்கள் இப்படிச் செய்து கொள்ளுகிறதுதான் நமக்கு அதிசயமாகத் தோன்றலாமே தவிர, உலகத்தில் இது அதிசயமல்ல.

கிறிஸ்தவர்களிலும் முஸ்லீம்களிலும் – கணவன் இறந்தவுடனேயே பெண்கள், வேறு புருஷனைக் கட்டிக் கொள்வார்கள். இது நம் நாட்டில் சிறு கூட்டத்தில் நடப்பது அதிசயம் எனலாமே தவிர, புருஷன் செத்து விட்டால் வேறு ஒரு புருஷனைச் சேர்த்துக் கொள்வது உலகத்தில் நடந்துவருகிற வழக்கமேயாகும். இந்துக்கள் என்று சொல்லப்படுகிற சாதியில் பல சாதிப் பிரிவுகள் உண்டு. சமூகத்தில் சிலரை, அவர்கள் ஏதோ தாழ்வான சாதி என்று கூறுகிறார்கள்! ஆனால், அவர்களிடையே இவ்வித மறுமணம் ஏராளமாக நடந்துவருகிறது.



### 4.4.4 குழந்தை மணம்

இந்தியாவில் குழந்தையாக உள்ள பெண்களை மணம் செய்து தரும் வழக்கம் ஏறக்குறைய கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. கவுதமர், விஷ்ணு, மநு முதலானவர்களின் ஸ்மிருதிகளை ஆதாரமாகக் கொண்டு இவ்வழக்கத்தை மேற்கொண்டனர்.

கி.மு. 4 ஆம் நூற்றாண்டுக்கும் இடையே மேலும் மேலும் திருமண வயது குறைக்கப்பட்டது. கி.மு. முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு குழந்தை மண முறையே பெரிதும் ஆதரிக்கப்பட்டது. கி.பி இரண்டாம் நூற்றாண்டு முதல் குழந்தை மணமே பெரு வழக்கமாகி விட்டது. யக்ஞவல்கியர், யமா முதலானோர் இம்முறையை மிகவும் வலியுறுத்தினர்.

கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் இது 12 வயது 13 வயது என்பதிலிருந்து 9 அல்லது 10 வயது குறைக்கப்பட்டது. அதனால் பெண்கள் கல்வி பெறும் வாய்ப்பு இயல்பாகவே தடுக்கப்பட்டது. குழந்தை மணத்தால் விளைந்த பெருங்கேடுகளுள் இது தலையாயது. எனவே, பெண்களில் பெரும்பாலோர் கல்வி அறிவு அற்றவர்களாகவே மாறி வந்தனர். குழந்தை மணம் பெரிதும் மேல் வருணத்தாரிடமே பெருவழக்காக இருந்தது. பருவமடைவதற்கு முன்பே பெண்களுக்குத் திருமணம் செய்கின்ற வழக்கம் சத்திரியர்களிடையே கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை பெருமளவில் நிலவியது.

குழந்தை மணத்தின் கொடுமையையும் அதன் காரணமாகப் பெண் கல்விபெறும் வாய்ப்பு மறுக்கப்படுவது, இளம் பருவத்திலேயே பிள்ளைபெறுவது, பேற்றின்போது சாவது, விரைவிலேயே முதுமை அடைந்து இறப்பது முதலான கேடுகள் விளைவதையும் தடுக்கும் நோக்குடன் 1860 வாக்கிலேயே இந்தியாவில் வெள்ளையர் சில சட்ட ஏற்பாடுகளைச் செய்தனர். பெண்களில் திருமண வயது 10 என வரையறுக்கப்பட வேண்டும் என்பது அதன் நோக்கம்.

ஐரோப்பிய நாடுகளிலும் நீண்டகாலம் குழந்தை மணம் வழக்கத்தில் இருந்தது. இங்கிலாந்தில் மேல்தட்டு வகுப்பினரிடம் நான்கு, ஐந்து வயதுக் குழந்தைகளை மணம் செய்து கொடுக்கும் வழக்கம் டியூடர் (கி.பி. 1485 –1603) ஆட்சிக்காலத்தில் நிலவியது. அத்தகைய பழக்கம் குறைந்து பெண்களுக்கு 12 வயது, ஆண்களுக்கு 16 வயது என்பது, 1929 வரையில் அங்கு நிலவியது. 1929 இல் இங்கிலாந்து மக்களவையில் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் வாயிலாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமண வயது 16 என்று உயர்த்தப்பட்டது. அதே சமகாலத்தில்தான் இந்தியாவில் திருமண வயதை உயர்த்தும் 'சாரதாச்சட்டம்' இந்தியாவில் இந்திய முற்போக்குச் சிந்தனையாளரான சாரதா என்பவரால், இந்தியச் சட்ட மன்றத்தில் முன் மொழியப்பட்டது.

1891 இல் இந்தியாவில் பெண்களின் திருமண வயது 12 என்று வரையறை செய்யப்பட்டது. அதன் பின்னர் 1925 இல் பெண்களின் திருமண வயது 13 என உயர்த்தப்பட்டது. இத்துணை ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிறகும் குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்யப்பட்டு விதவை ஆனவர்களின் எண்ணிக்கை மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்பக் கூடிக்கொண்டே சென்றது.

இதுபற்றி முதன்முதலாகத் தம் கருத்தை வெளிப்படுத்திய ஈ.வெ.இரா. “உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடம்” (குடி அரசு. 22–8–1926) எனக் கூறியுள்ளது, பெண் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவரின் சிந்தனையையும் தூண்டுவதாகும்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி [illegible] குழந்தை காங்கிரஸ்காரராகவும், காந்தியாரைப் போற்றுபவராகவும் இருந்த ஈ.வெ.இரா. குழந்தை விதவைகள் நிலை கண்டு காந்தியார் நெஞ்சம் குமுறி எழுதியதையே மேற்கோளாகக் காட்டித் தம் கருத்தையும் 'குடி அரசு' ஏட்டின் மூலம் புலப்படுத்தியுள்ளார். அது பின்வருமாறு:

"உலகிலேயே மிகப்பெரிய சீர்திருத்தக்காரரான மகாத்மா காந்தியடிகள் இந்து விதவைகளைப் பற்றி அனேக சந்தர்ப்பங்களில் பேசியும், எழுதியும் வந்திருக்கிறார். அவற்றுள் சென்ற ஆண்டு 'நவஜீவன்' பத்திரிக்கையில் மகாத்மா எழுதி இருக்கும் விசயத்தைக் கவனித்தால், விதவைகளின் விடுதலை சம்பந்தமாய் மகாத்மா எவ்வளவு தூரம் உழைக்கிறார் என்பது புலனாகும். அக்கட்டுரையின் ஒரு சில பாகமாவது:-

"பால்ய விதவைகளைக் கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்று இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றும் இல்லை என்பது எனது திடமான நம்பிக்கை. விதவைத்தன்மை என்பது எவ்விதத்திலும் ஒரு தர்மமாகாது. பலாத்காரத்தினால் அனுஷ்டிக்கச் செய்யும் எவ்விதச் செயலும் அறமாகாது. பலாத்காரத்தினால் நடத்தும் விதவை வாழ்வு பாவமானது. பதினைந்து வயதுள்ள ஒரு பால்ய விதவை தானாகவே விதவை வாழ்வைக் கொண்டிருக்கிறாள் என்று சொல்லுவது, அவ்விதமாகச் சொல்லுவோரின் கொடூர சுபாவத்தையும், அறியாமையையுமே விளக்குகிறது." என்று எழுதினார்.

விதவைகளின் கொடுமையை நீக்க ஒரு நூறு வருடங்களாக இராஜாராம்மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகர், கோலாப்பூர் மகாராஜா, சுரேந்திரநாத பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட்டு உழைத்தனர். இது போழ்தும் இத்தகைய சீர்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர் இறங்கி உழைத்து வருகின்றனர்." 'குடி அரசு' - கட்டுரை -22-8-1926) "(பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக் 137-139)

**இளம் வயது மணவிலக்குச் சட்டம்**

ஈ.வெ.இரா. எழுதுகிறார் : "மக்கள் இளம் வயதில் - அதாவது தக்க வயதும், உணர்ச்சியும் இல்லாத காலத்தில் - விவாகம் செய்யப்பட்டு வருவதால், மக்கள் சமூக வளர்ச்சிக்கும் உரத்திற்கும் கேடாயிருந்து வருகிறது என்கின்ற உண்மையை நமது வாழ்வில் தினமும் அனுபவத்தில் கண்டு வருவதோடு, அவற்றைத் தடுக்க வேண்டுமென்பதாகவும் முயற்சி எடுத்து வருகின்றோம்.

இதைப்பற்றிப் பல சமூக மகாநாடுகளிலும், பேசித் தீர்மானங்களும் செய்து வருகின்றோம். ஆனால், அதை அனுசரித்து அது அமுலில் வரத்தக்க ஏற்பாடுகள் ஏதாவது செய்ய ஆரம்பித்தால், உடனே அங்கு மதம் வந்து குறுக்கே விழுந்து, அம்முயற்சிகளை அழிப்பது வழக்கமாகவே இருந்து வந்திருக்கின்றதும் நாம் அறிவோம். இதன் காரணமாகவே, பெரிதும் நாம் மனித இயற்கைக்கு விரோதமான மதங்களும் கண்மூடிக் கொள்கைகளும் மண்மூடிப் போகவேண்டுமென்று முயற்சித்து வருகின்றோம். இம்முயற்சிக்கு யார் எதிரிடையாய் இருந்த போதிலும் நாம் ஒரு சிறிதும் இலட்சியம் செய்யாமல் இடையூறான மதங்களையும் அதற்கு ஆதாரமான சாமிகளையும் கூட ஒழித்தாக வேண்டும் என்றே சொல்லுகின்றோம்.

சமீப காலத்தில் சென்னை சட்டசபையில் இது விஷயமாய் சட்டம் செய்வதைப் பற்றி வாதம் நடைபெற்ற சமயத்தில், பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்த மாஜி மந்திரி சர்.ஏ.பி. பாத்ரோ அவர்கள் சற்று மாறுதலாய்ப் பேசியதற்காக அவரை, 'பார்ப்பனரல்லாதார் கட்சி ஸ்தானத்தை இராஜினாமா கொடுத்துவிட்டுப் பார்ப்பனர் கட்சிக்குப் போய் விட வேண்டும்' என்று கூட எழுதியிருந்தோம்..."